உ

சிவமயம்



# ஆத்மஜோதி முத்தையா

*அவர்களின்*

நூறாவது ஆண்டு ஜெயந்தி விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

25.05.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ
சிவமயம்

# ஆத்மஜோதி முத்தையா

*அவர்களின்*

## நூறாவது ஆண்டு ஜெயந்தி விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

## 25.05.2018




தொகுப்பு :

சிவதொண்டன், திருமுறை வித்தகர்

**திரு.நா.முருகையா**

*ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.*

ஆத்ம ஜோதி தியான மணிமண்டபம்,

ஏழாலை.

*T.P : 021 491 7840, 077 5818733*


இலவசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# போற்றித் துதிப்போம்

01. எங்களூர் ஏழாலை தந்த செல்வர்
தங்கமான குணம் கொண்ட பெரியவராவார்
மங்களமாய் வாழ நெறிகள் சொன்ன
பொங்க ரவனடியார் போற்றி போற்றி.

02. அன்பு நிலைப் பெருவாழ்வு வாழ்ந்த செல்வர்
அமுத நாவன்மையுடைய புனித சீலர்
பொன் பெருகும் ஆத்மஜோதி மலரதனால்
பொற்புடைய சாது அவர் பாதம் போற்றி.

03. கல்விச் செல்வம் வளர வளமான செல்வர்
நல்வித்தை விளை நிலத்து காவலாளர்
சொல்லுடனே செயலொன்றி சேவை செய்த
நல்லிணக்க மனத் தகத்தார் பாதம் போற்றி.

04. இங்கிலாந்து கனடா தான் கண்ட செல்வர்
இந்தோனேசியா நாட்டிற்கும் சென்ற செல்வர்
எங்கெல்லாம் சென்றாலும் எம்மொழி பேசி
சங்கமமாய் சைவநெறி காத்தார் போற்றி.

05. எழுத்துப்பணி பேச்சுப்பணி இனிய செல்வர்
எல்லார்க்கும் உறவினராய் உயர்ந்து நின்றார்
வாழ்த்தாமல் வாழ்த்தி மக்கள் வறுமை போக்கி
அழுத்தமுடன் ஆதரித்தார் அதற்கே போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. ஏழாகும் முறையுடைய இந்தப்பூசை
ஏழாலை மாணவர்செய் நல்ல பூசை
ஏற்றிடுவார் எங்கள் நல்முத்தவரே
என்றும் எமை வாழ்த்திடுவார் முத்தையனாரே.

07. கல்விக்கு முத்தாவார் கருத்துக்கு முத்தாவார்
சொல்லுக்கு முத்தாவார் செயலுக்கு முத்தாவார்
நல்லிரக்க முத்தாவார் நா முத்தையாரவார்
நாம் நிதமும் போற்றிடுவோம்.

08. ஏராரும் ஏழாலை மாணவர்க்காய்
எடுத்த இந்த அறநெறிப் பாடசாலை
சீரான வளமுடனே வளர வேண்டி
சிறுவர் நாம் சிரம் பணிந்தோம் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையா

யாழ்ப்பாண குடாநாட்டின் மத்தியில் செம்மண் இயற்கையாகவே வளம் கொழிக்கும் விவசாயப் பெரு நிலப்பரப்பில் அமைந்த முக்கனிச் சோலைகளும், இதன் நடுவே ஏழு பிரதான அருள்மிகு ஆலயங்களும் சூழவுள்ள திருப்பதி ஏழாலை என்னும் சிவப்பதியாக அமைந்துள்ளது. இக் கிராமத்தின் சிற்றூர் இலந்தை மரங்கள் பெருகிய இலந்தைகட்டி என அழைக்கப்படுகின்றது. இங்கு அருள்பாலிப்பவர் இலந்தைகட்டி பாதாளபைரவர். இப்புதுமையான பைரவரின் மீளா அடியவரும் பெருமதிப்பும் சிறப்பும் மிக்க பரம்பரை விவசாயக் குடும்பத்தில் தோன்றியவருமான நாகமணி என்பவருக்கும் அவர்தம் இல்லத்தரசி பொன்னுப்பிள்ளை அம்மையாருக்கும் சற்புத்திரராக 25.05.1918 அன்று அவதரித்தவர் முத்தையா என்னும் தவமுடையான்.

இவர் பிறக்கும் போது முத்தான கொள்ளை அழகுடன் காணப்பட்டதால் முத்தையா எனத் திருநாமஞ் சூட்டப்பட்டார். இவரின் பெற்றோர் இவரை நன்கு பேணி அரவணைத்து மகிழ்ந்தனர். பேரனார் சிறுவயதிலிருந்தே தமது குடிப்பிறப்பின் இயல்பான அன்மீக சிந்தனையை முத்தையாவிடம் மெல்ல மெல்லப் புகுத்தி எதிர்கால அறநெறி வாழ்வின் வித்தை இவரின் சிந்தனையில் ஆழப் பதித்திருந்தார். பேரனாரின் நல்லுபதேசங்களும் குல தெய்வமான பாதாள ஞான வைரவரின் பிரார்த்தனையும் பச்சிளம் பாலகனான முத்தையாவின் நல்வாழ்வுக்கு அடிகோலியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விப்பருவம்**

முத்தையாவின் ஆரம்பக்கல்வி ஏழாலை கத்தோலிக்க பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை தொடர்ந்தார். ஆறாம் வகுப்பு முதல் மயிலணி சைவப் பாடசாலையில் சிறப்புடன் கற்று வந்தார். இங்கு கற்பித்த நல்லாசிரியர்களின் நற்சேவையால் இவர் சைவத்தையும் தமிழையும் மிக ஆர்வத்துடன் மிக ஆழமாகப் படித்தார். இக்காலத்தில் யோக சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் என்னும் சிவநெறியாளரின் அருள் நோக்கும் நட்பும் கிடைத்தது. இதன் பேறாக இவர் திருநெல்வேலி முத்துத்தம்பி சாதனா பாடசாலையிற் சேர்ந்து படிக்கும் பேறு பெற்றார். இங்கு ஒருவருடம் ஆசிரியர் தராதரப் பத்திர படிப்பை மேற்கொண்டார். இக்காலத்தில் நாவலர் பெருமானின் பெறாமகன் த.கயிலாசபிள்ளையிடம் சமய பாடத்தை முறையாகக் கற்றதனால் இவர் சைவ சமயத்தில் நன்கு பிரகாசம் அடையும் நற்பேற்றினையும் தமதாக்கிக் கொண்டார். இச்சமய காலத்தில் யாழ் வேதாந்த மடம் என அழைக்கப்படும் சிவகுருநாத பீடக் குருமகான் மகாதேவ சுவாமிகளின் நட்பான தொடர்பு கிடைத்ததால் முத்தையாவுக்கு ஆத்மஞானம் பிரகாசிக்கத் தொடங்கியது.

இவர் 1937இல் திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக்கு தேர்வானார். இப்பயிற்சிக் கலாசாலையில் படித்த காலத்தில் பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் நேரடிக் கண்காணிப்பில் இணைந்தார். பண்டிதமணியிடம் பயிலவரும் மாணவர்கள் தமிழ், சிவநெறி, ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றில் சிறப்புடன் காணப்பட்டனர். இவ்வாறு பண்டிதமணியின் சிறப்பான உபதேசத்தினால் முத்தையா சைவமும் தமிழும் நற்பண்பும் கூடிய ஆன்மீகவாதியாக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பணி

ஆசிரியர் பயிற்சிக் காலத்திற் சித்தி எய்தியதும் இறையருள் கவர்ந்திழுக்க ஆசிரியர் பணி காரணமாக மலையகஞ் சென்றடைந்தார். நாவலப்பிட்டியில் ஏழைத் தொழிலாளராக வாழ்ந்த மக்கள் ஏனைய இடங்களுடன் ஒப்பிடும் போது கல்வி, சமயம், பொருளாதாரம் ஆகியவற்றில் பின்தங்கிய நிலையில் இருந்தனர். இவர்களின் மீது பரிவு காட்டி யாவற்றிலும் முன்னேற இறையருள் கிட்டியது. இதன்பேறாக மலையகம் வந்த முத்தையா நாவலப்பிட்டி சென்.யோன்ஸ் வித்தியா சாலையில் ஆசிரியப் பணியை ஏற்றார். இப்பாடசாலையில் 1939 ஆம் ஆண்டு தொடக்கம் 1948ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

இதே ஆண்டு இவர் நாவலப்பிட்டி கதிரேசன் குமார வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார். 1960இல் அதிபரானார். இக்காலத்தில் எல்லாப் பாடசாலைகளும் அரசுடமையாக மாறியதும் பாடசாலைகளிற் கல்வித்தரம் வீழ்ச்சியுற்றது. வசதி படைத்த மாணவர்கள் பாடசாலைக் கல்வியுடன் பெருந்தொகைப் பணம் கொடுத்து தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்றனர். நாவலப்பிட்டி கதிரேசன் குமார வித்தியாசாலை மாணவர்கள் யாவரும் வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். எனவே அவர்களால் ஏனைய வசதியுடைய பிள்ளைகளின் தரத்தை எட்ட வேண்டுமென அதிபர் சிந்தித்தார். இதன் பேறாக பாடசாலைப் படிப்பு முடிந்த பின் மாலை நேரங்களில் பிள்ளைகளுக்கு இலவசமாக மேலதிகக் கல்வி போதித்து யாவரையும் பயனடையச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் ஒழுக்கம், பண்பாடு, தவறுகள், ஒழுங்கற்ற பாடசாலை வரவு யாவற்றையும் ஏனைய ஆசிரியர் கடுஞ் சொற்களாலும் பிரம்பினாலும் திருத்த முற்படுவர். ஒரு மாணவனைக் கண்டித்தோ தண்டித்தோ பயனேதும் பெற முடியாதென உணர்ந்தார். இதனால் அப்படியான தவறுகள் செய்யும் மாணவர்களை நன்கு அரவணைத்து அவர்களின் உட்கருத்தை அறிந்து அன்பினால் நல்வழிப்படுத்துவார். அவரின் நெகிழ்ந்த உள்ளம், கருணையுள்ள பார்வை, நல்லாசிரியருக்கான நற்பண்பு ஆகியவற்றினால் மாணவனை நன் மாணவனாக மாற்ற எண்ணினார். இன்சொற் பேசி அரவணைத்து முன் செய்த பிழைகளை மீண்டும் செய்யாது தவறின்றி ஒழுகுமாறு நல்லுரை வழங்குவார். இதனால் மாணவ சமுதாயம் அதிபரை நன்கு மதித்துத் தமது குடும்ப உறவினர் போலப் பழகினர். இதனால் அதிபர் கற்பித்தலில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். யாவருமே அவரின் சிறந்த குணங்களையும் அடுத்தவரை அன்பினால் வசீகரிக்கும் பெருந்தன்மையையும் பாராட்டினார்.

இவர் அதிபராக இருந்த காலத்தில் பணியாற்றும் ஆசிரியரின் ஒழுக்கம், பண்பாடு, ஒழுங்கற்சேவை, நேரம் தவறிய பாடசாலை வரவு, கற்பிப்பதில் கவனக்குறைவு போன்ற பல சீர்கேடுகளை உரியவர்களிடம் சமரசமாகவும் இதமாகவும் பேசி அவர்களை நல்வழிப்படுத்தினார். இதனால் அவர்கள் தமக்கு வர இருந்த மேலிடத்து ஒழுக்காற்று நடவடிக்கையிலிருந்து தவறவும் உதவியது. யாவரும் கடமையுணர்வுடன் பணியாற்றி நல்லாசிரியர்களாக மாறவும் ஏதுவானது.

1942இல் ஆசிரியர் சங்கத்தில் நிர்வாக உறுப்பினராகி அருஞ் சேவையாற்றினார். தமது பணிச் சிறப்பினால் மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண ஆசிரிய சங்கத்தினரால் நன்கு மதிப்பான உயர்பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அகில இலங்கை ஆசிரியர் சங்கத்திலும் பணியாற்றினார்.

நாவலப்பிட்டியில் நல்லாசிரியராக, அதிபராக, தொழிற்சங்க நிர்வாக உறுப்பினராகவும் வாழ்வாதாரம் நோக்கிப் பணியாற்றிய போதும் இவரின் உடல் இயங்கிய காலந்தொட்டு அடிப்படையாக அமைந்த ஆன்மீக சிந்தனையும் நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம் என்ற ஔவையாரின் கூற்றுக்கிணங்கத் தம்மைச் சமய சமூகத் தொண்டில் இணைத்தமை இறைவன் திருவருளேயாகும். இவரது தூய வாழ்வுக்கும் தூய சிந்தனைக்கும் இட்டமுடன் இவரது தலையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவனின் செயலல்லவா? இது சிவனின் திருவிளையாடலின் ஒரு அம்சம் என விளங்கியது.

## சமயப்பணியும் சமூகப் பணியும்

ஆசிரியர் பணியின் போது நாவலப்பிட்டி வாழ் மக்கள் பொருளாதார வளம் குறைந்தும், சைவ சிந்தனை குன்றியும், பல்வேறு குடும்பப் பிரச்சினைகளில் மூழ்கியும் துன்புற்று வாழ்ந்ததை உணர்ந்தார். தம்மிடம் கற்கும் மாணவர்களின் பிஞ்சு உள்ளக் குமுறல்களை அடிப்படை அறிவாக ஏற்று இச்சமூகத்துக்கு நல்லுதவி செய்ய எண்ணினார். மாணவர்கள் மூலம் இப்பிரச்சனைக்கு உரியவர்களை அணுகி உரையாடினார். அதன் பேறாக மாணவர்களின் சிறப்பான எதிர்கால நன்மை கருதி உரியவர்களுக்கு நல்லுபதேசஞ் செய்தார்.

தமிழ் மக்களின் அவல நிலையை உணர்ந்து எதிர்காலத்தில் யாவரும் சிறப்பாக வாழ வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக வீண் பிரச்சினைகளை நாடாது யாவரும் தம்மையே அர்ப்பணித்து வாழ வேண்டும் என அறிவூட்டினார். இறை உணர்வும் கடின உழைப்பும் கூடிய மக்கள் வீண் பிரச்சனைகளை நாடாது அறவழிக்குச் செல்லவும் வற்புறுத்தினார். இதனை நன்கு சிந்தித்த மக்கள் ஆசிரியரின் மகத்தான சேவையையும் நல்லுபதேசத்தையும் ஏற்று அமைதியடைந்தனர். இங்கு சமயநெறி சமரசமும் மேலோங்கியது. யாவரும் தம்மிடையே ஆசிரியரின் நல்வழியை நிலைக்கச் செய்தனர்.

மக்கள் சேவை மகேசன் சேவை என உணர்ந்ததால் மக்களிடையே உள்ள மதுப்பழக்கம், களியாட்டம், வீண் சண்டையிடுதல் போன்றவற்றை நீக்கி அவர்களை நெறிப்படுத்த முன்வந்தார். வறுமை காரணமாக மக்கள் மதம் மாறுவதை நீக்கவும் முற்பட்டார். மாணவர்களிடையே நல்ல எதிர்காலச் சிறப்பை உணர்த்தி அவர்கள் மூலம் தோட்டங்கள் தோறும் இந்து வாலிபர் சங்கத்தை நிறுவி நாவலப்பிட்டியில் தாய்ச்சங்கம் செயற்பட உதவினார். இச்சங்கங்கள் மூலம் அவ்வப்பகுதியில் சமய விழாக்களை ஏற்படுத்தினார். இதனால் மக்களிடையே ஒற்றுமையும், சமய உணர்வும் சமூக அபிவிருத்தியும் வாழ்க்கைச் சிறப்பும் பிரகாசித்தன.

ஒரு பாடசாலை ஆசிரியர், கல்விமான், நற்பண்பாளர், சமயநெறியாளர் தமக்கென நாடாது பொது மக்களுக்காகவே அருஞ்சேவை ஆற்றுகின்றாரென யாவரும் உணர்ந்து அவர் மீது நம்பிக்கையும் பெருமதிப்பும் வைத்துப் பணிந்து அவரின் ஆணைப்படி ஒழுகி வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மஜோதி சஞ்சிகை

இவரின் அடுத்த பணியாக நாவலப்பிட்டியில் "ஆத்மஜோதி" என்னும் சஞ்சிகையை 1948இல் ஆரம்பித்தார். இவ்விதழ் ஆசிரியரின் ஆன்மீகக் கருத்துக்களையும் இதயத்தைத்தொடும் உள்ளார்ந்தமான செய்திகளையும் சைவப் பெரியவர்களின் சமயக் கருத்துக்களையும் உள்ளடக்கியதான சைவசமய பிரசார நூலாக அமைந்தது. கறைபிடித்து இருள் சூழ்ந்து இதயங்களின் உண்மையான ஆன்மீக உணர்வென்றும் விளக்கேற்றிய இதயத்தைச் சோதி மயமாக்கும் ஒளிப்பிளம்பாகவே அமைந்தது. இவரின் நற்பணிக்கு நயினாதீவைச் சேர்ந்த ஆத்மசீலர் சு.இராமச்சந்திரா இவ்விதழ் வெளிவரக் காரணமாக இருந்து சிறப்பித்தார். சமய சீலர்களின் மேலதிக ஒத்துழைப்பால் இச்சஞ்சிகை வெற்றிநடை போட்டு மிகச் சிறப்பாகவும், ஆசிரியரின் சமய சமூக தன்னலமற்ற பொதுச் சேவையின் சின்னமாகவும் அமைந்தது. இதனால் இவர் "ஆத்மஜோதி முத்தையா" என்றே அழைக்கப்பட்டார்.

இவர் இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, சுவிற்சலாந்து போன்ற வெளிநாடுகளிலும், யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு போன்ற பல இடங்களுக்கும் சென்று சமயச் சொற்பொழிவுகள், கூட்டுப் பிரார்த்தனை, பஜனை, தியானம போன்ற பல நிகழ்வுகளையும் விரிவுபடுத்தினார். மக்களும் மனம் மகிழ்ந்து உள்ளன்புடன் இறைசிந்தனையை அனுசரித்து மகிழ்ந்தனர்.

இவர் சைவசமய மேலீட்டினால் பாதயாத்திரைகள் மூலம் சிவப்பணியை மேற்கொண்டார். தமது மக்களனைவரும் நலமுடன் நற்பணியை நாட வேண்டுமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணினார். இம் மண்ணிலுள்ள பெரிய சிறிய ஆலயங்களுக்கெல்லாம் தம் பக்தர்களுடன் இறை நாமங்களையும் துதிப்பாடல்கள், திருமுறைகளையும் ஓதிய வண்ணம் ஆசாரசீலர்களாக ஆன்மீகப் பவனி செய்கின்றனர். உணவுவேளை அன்பர்களின் வேண்டுதலின் குறிப்பிட்ட கோயில்களிற் தங்கிக் கூட்டுப் பிரார்த்தனை, சொற்பொழிவு ஆற்றி இறையருளை மெச்சிய பின் அவ்விடங்களிற் பசியாறி பாதயாத்திரை தொடரும்.

அன்று சமயகுரவர்கள் வாழ்ந்து காட்டிய திருத்தலங்கள் தோறும் பவனி வந்து நிகழ்த்திய அருஞ்சேவையை ஒட்டியே இவரது பணியும் எமக்கு ஞாபக மூட்டுகின்றது. இப்பணி மூலம் இவர் சமயப் பணிக்குப் பல புதிய எழுச்சி முறையையும் செயற்படுத்தினார்.

இவ்வாறு பல சிவப்பணிகளை முன்னெடுத்தும் தமது கற்ற கல்வியின் சிறப்பும் சிந்தனையிற் குடிகொண்ட ஆன்மீகச் சிந்தனையும் உந்திச் செல்ல பல சமய நூல்களை வெளியிட்டார். இவர் எழுதிய பதினைந்து நூல்களில் தத்துவக் கதைகள், ஏழாலை, ஈழத்துச் சித்தர்கள், கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஆகிய நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப்பரிசு பெற்றவையாம். எழுத்தாற்றலுடன் சமய தத்துவங்கள், ஒழுக்கம், நன்நெறி, சமூகச் சீர்திருத்தம், தமிழ்மொழி, தருமம், தமிழர் பண்பாடு போன்ற அரிய தலைப்பில் திறமான சொற்பொழிவுகள் நடாத்தியும் மக்களைத் தம்மால் ஈர்த்துச் சமயநெறியை வலுப்படுத்தினார்.

இவர் தமது சமய அறிவு முதிர்ச்சியால் 1948இல் திருவண்ணாமலையில் நடைபெற்ற அருணகிரிநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவில் திருமுருக கிருபானந்தவாரியார், கி.வா.ஜகந்நாதன் போன்ற பெரியவர்கள் வீற்றிருந்த சபையில் யாழ்ப்பாணத் தமிழில் ஒரு திருப்புகழ் பாடி விளக்கங் கூறினார். இதனால் கிருபானந்தவாரியாரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

1954இல் புத்தகாயாவில் விநோபாவே நடாத்திய சர்வோதய மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகச் சென்று உரையாற்றினார். 1965 இல் செட்டிநாட்டாங்கோட்டையில் சா.கணேசன் ஏற்பாடு செய்த கம்பன் விழாவிலும் உரையாற்றினார்.

1979 இல் மகான் சங்கராச்சாரியார் நடாத்திய அகில உலக இந்து சமய மகாநாட்டில் இலங்கையர் குழுவின் தலைவராக அமைந்து சிறப்புரை நிகழ்த்தினார். இவ்வாறு மலேசியா மற்றும் சில நாடுகளின் அழைப்பை ஏற்று அங்கெல்லாம் சென்று சொற்பொழிவாற்றி எம் நாட்டுக்கு பெருமை தேடினார்.

1992இல் இந்து சமயப் பேரவை என்ற சமயப் பணியாற்றும் நிறுவனம் யாழ். நல்லூரில் நிறுவப்பட்டு முத்தையாவைத் தலைவராகக் கொண்டு இயங்கியது. இந்த நிறுவனம் அறுபது அநாதைப் பிள்ளைகளைப் பொறுப்பேற்று நடாத்தியது. இவர் ஒரு பிரமச்சாரி. ஆனால் தமது 74ஆம் வயதில் அறுபது பிள்ளைகளைத் தந்தை போல வழிநடத்திப் பராமரித்து வந்தார். இத்தேவைகருதி உள்ளூரிலும் வெளிநாட்டிலும் நிதியும் பொருளும் சேகரிக்க எண்ணினார். தமது தெளிந்த தூய சிந்தனையில் வஞ்சனையில்லாத நெஞ்சிற் கறைபடியாத அறுபது பிஞ்சுப் பாலகர்களுக்காகவே அரும்பாடுபட்டார். இதனால் எம் தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் தேசங்களுக்கெல்லாம் சென்று தமது கல்வியறிவு சிவசிந்தனை, ஆற்றல், யோகநிலை யாவற்றையும் வெளிப்படுத்தியும் சமயச் சொற்பொழிவு, கூட்டுப் பிரார்த்தனை போன்ற பணியால் அறச்செயலுக்கு உதவி கோரினார். வெற்றியும் கண்டார்.

ஆறுமுகநாவலரின் பணிகளை அடியொற்றி பல்லாண்டுகள் சிவப்பணியாற்றினார். பிறப்பால் பெருங்குடி மகன், புகழ் தேடிய அறக்கல்வியாளன், பண்பாலும் மக்கள் சேவையாலும் சான்றோன், அடுத்தவரை நேசிப்பதில், அரவணைப்பதில், வழிநடத்துவதில், பல்வகையிலும் உதவுதலிலும் அன்புடையோன், சமயநெறி மேலோங்கவும் மக்கள் தூயசைவ நெறியைக் காதலாற் கசிந்து கண்ணீர் மல்கி உள்ளன்புடன் மனித நேயத்தையும் தன்னைத்தானே அறியும்படி உபதேசித்தும், பிரார்த்தனை செய்தும் பாத யாத்திரை சென்று தன்னுள்ளே இருக்கும் சிவனுக்கு அண்டமெல்லாம் வியாபித்திருக்கும் சிவதரிசனம் காட்டியும் அனாதைக் குழந்தைகளை ஆதரிக்க யாவரிடமும் அறநெறி மூலம் இரந்தும் யாவரையும் வழிநடத்திய சிவநேயச் செல்வனுமாவார்.

தமது பிறப்பின் பலனாக ஆன்மலாபம் கருதி தூய பணியாற்ற இல்லறம் நாடாது சொல்லறம் பேணி உள்ளும் புறமும் தூயனவாய் ஆசாரசீலனாய் அறம்பல புரிந்து மறுமைக்கும் இன்பம் தேடிய ஜீவாத்மா 08.09.1995 அன்று பரமாத்மாவுடன் சங்கமமானது.

இவரது அளப்பரிய சேவையை உணர்ந்து அதன் நன்றிக் கடனாக அன்பு உள்ளங்கள் அவரின் பிறந்த மண்ணில் ஓர் அழகிய நினைவுச் சின்னமாக மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தை அமைத்தனர். இப்படித்தான் வாழ வேண்டுமென காட்டிய பூத உடலை ஒத்த தெய்வச் சிலையையும் நிறுவி நன்றி செலுத்திய நன்னாள் 25.02.2002 ஆகும்.

அறம் பல செய்த மறத்தமிழனின் பெற்றோர் இட்ட பெயர் முத்தையா. சைவத்தின் பெருமையை உலகறியச் செய்ய எழுத்தில் பாரம்பரியத்தால் இட்ட பெயர் "ஆத்மஜோதி" இவரது பெயருடன் ஒட்டியதால் ஆத்மஜோதி முத்தையா ஆனது. கல்வியூட்டிய குருவே இவரது ஆன்மீக நடையறிந்து ஆத்மீக வள்ளலென்றார். சமய ஒளி நாட்டச் சென்றவர்க்கு வெளிநாட்டில் கிடைத்த பெயரே "ஞானசுரபி"

பட்டங்கள் கிடைத்தாலும் நிலைத்ததில்லை. உடலும் அவ்வாறே. பிறந்தவர் அடுத்த நிமிடமே இறப்பது உறுதி. இது நியதி. இதையுணர்ந்து தீயன கழிந்து நல்லன தேடிக் கற்று நல்லோர் வகுத்த அறங்கள் நலெட்டில் நாநிலம் போற்றும் நல்லனவற்றையேனும் நல்கி மறுமையின் சுகம் தேடி நல்லறமாக அறநெறி தழுவி ஆடலே புரியும் அம்பலவாணரை அல்லும் பகலும் அனுசரிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வ முத்துக்குமாரசுவாமி நாமாவளி

## *(தருமபுரம், பி.சுவாமிநாதன்)*

| | | |
|---|---|---|
| 01. | சரணம் சரணம் | முத்தையா |
| | சரவண பவனே | முத்தையா |
| 02. | சரணம் சரணம் | முத்தையா |
| | சஞ்சலம் தீர்ப்பாய் | முத்தையா |
| 03. | சரணம் சரணம் | முத்தையா |
| | சங்கரன் மகனே | முத்தையா |
| 04. | சரணம் சரணம் | முத்தையா |
| | சௌபாக்கியம் | முத்தையா |
| 05. | சரணம் சரணம் | முத்தையா |
| | சக்தி அருள்வாய் | முத்தையா |
| 06. | சரணம் சரணம் | முத்தையா |
| | சண்முக அருள்வாய் | முத்தையா |
| 07. | சரணம் சரணம் | முத்தையா |
| | ஷட்கோணபதயே | முத்தையா |
| 08. | வேளூர் வளரும் | முத்தையா |
| | வேண்டும் அருளது | முத்தையா |
| 09. | அன்பது அருள்வாய் | முத்தையா |
| | அருளது தருவாய் | முத்தையா |
| 10. | அறிவைத் தருவாய் | முத்தையா |
| | அமைதியைத் தருவாய் | முத்தையா |
| 11. | ஆறுதல் தருவாய் | முத்தையா |
| | தேறுதல் சொல்வாய் | முத்தையா |
| 12. | ஆடும் மயிலோய் | முத்தையா |
| | ஆவல் தீர்ப்பாய் | முத்தையா |
| 13. | இன்பம் தருவாய் | முத்தையா |
| | இன்னல் தீர்ப்பாய் | முத்தையா |
| 14. | இடரைக் களைவாய் | முத்தையா |
| | இங்கே வருவாய் | முத்தையா |
| 15. | ஈசன் மகனே | முத்தையா |
| | ஈடேற அருள்வாய் | முத்தையா |
| 16. | உண்மைத் தெய்வம் | முத்தையா |
| | உயர்வுத் தெய்வம் | முத்தையா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 17. | ஊனம் தீர்ப்பாய் | முத்தையா |
| | ஊக்கம் தருவாய் | முத்தையா |
| 18. | என்பிழை பொறுப்பாய் | முத்தையா |
| | என் உயிர்த்தெய்வம் | முத்தையா |
| 19. | ஏழையைக் காப்பாய் | முத்தையா |
| | ஏழிசை ஏத்தும் | முத்தையா |
| 20. | ஐயனே அப்பனே | முத்தையா |
| | ஐயம் தீர்ப்பாய் | முத்தையா |
| 21. | ஒப்புனக்குண்டோ | முத்தையா |
| | ஓர்வழி அருள்வாய | முத்தையா |
| 22 | கருணை செய்வாய் | முத்தையா |
| | கதியது தருவாய் | முத்தையா |
| 23. | செல்வம் தருவாய் | முத்தையா |
| | செந்தழல் மேனி | முத்தையா |
| 24. | சேவற்கொடியாய் | முத்தையா |
| | சேயெனைக் காப்பாய் | முத்தையா |
| 25. | ஞானம் தருவாய் | முத்தையா |
| | ஞானச் சுடரே | முத்தையா |
| 26. | தத்துவப் பொருளே | முத்தையா |
| | தண்ணருள் தருவாய் | முத்தையா |
| 27. | நன்மையைத் தருவாய் | முத்தையா |
| | நடமிகும் மயிலோய் | முத்தையா |
| 28. | பக்தியைத் தருவாய் | முத்தையா |
| | பழவினை தீர்ப்பாய் | முத்தையா |
| 29. | பாடினோம் ஆடினோம் | முத்தையா |
| | பார்த்தெமைக் காப்பாய் | முத்தையா |
| 30. | பிணியது தீர்ப்பாய் | முத்தையா |
| | பிழையைத் தீர்ப்பாய் | முத்தையா |
| 31. | மதியைத் தருவாய் | முத்தையா |
| | கதியைத் தருவாய் | முத்தையா |
| 32. | விதியைத் தருவாய் | முத்தையா |
| | நிதியைத் தருவாய் | முத்தையா |
| 33. | வழியது தருவாய் | முத்தையா |
| | வாழ்வைத் தருவாய் | முத்தையா |

*வேலும் மயிலும் துணை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளும் நானும்

மண்ணிலே தான் பிறந்த மனிதர் படுந் துயரம்
எண்ணியே நான் வருந்தி இதற்கென்ன காரணமோ
என்று நினைத்து இறைவனிடம் கேட்பமென்று
சென்றேன் திருலோகம் தெய்வத்தைக் கண்டு விட்டேன்.
ஆழ்ந்த அமைதியுடன் ஆண்டவனார் வீற்றிருந்தார்
ஆண்டவனே! என் மனதில் ஐயமொன்று உள்ளதென்று
காண்டீபம் போல் வளைந்து கையெடுத்துக் கும்பிட்டேன்.
விண்ணில் இருந்து எங்கள் வேதனையைப் பார்ப்பதற்கோ
மண்ணில் எமைப் படைத்தாய் மனிதர் படும் துயரம்
என்னவென்று சொல்லி எடுத்துரைப்பேன் உங்களிடம்
சொன்னால் கண்ணீர் சொரியும் தூயவரே உங்களுக்கும்
அன்னையில்லாப் பிள்ளைகள் போல் அழுது தவிக்கின்றோம்
பஞ்சம் பசிகளவு பட்டினியும் பொய் கொலையும்
மிஞ்சும் பல நோய்கள் வேதனைகள் சோதனைகள்
சூறாவளி வெள்ளம் சுனாமியொடு மண்சரிவு
ஆறாத வெப்பம் அனர்த்தம் நிலநடுக்கம்
உயிரிழப்போ பல லெட்சம் உடமைகளோ பல கோடி
மயிரிழையில் நான் தப்பி வந்து இங்கே நிற்கின்றேன்
எம்மை இந்த துன்பங்கள் ஏன் வருத்துகின்றதென்று
இந்த மடையனிடம் இயம்புமென்று கேட்டு நின்றேன்
என் நிலையைக் கண்ட இறைவன் மனமிரங்கி
புன்முறுவல் பூத்து புனிதவாய் தான் திறந்து
மானிடனே! நானுமுன்னை மறு உயிர்க்கும் மேலாக
ஆறாம் அறிவு தந்து அவனியிலே நான் படைத்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியதி பல வைத்தேன் நீயுணர்ந்து முன்னேற
அமைதியைக் காத்திடுதல் அடியேனின் வேலையல்ல
என்றும் அமைதியுடன் இவ்வுலகில் நீ வாழ
உன்னைப் படைத்துள்ளே உள்ளமொன்றை நான் வைத்தேன்
வைத்த அந்த உள்ளத்தின் மகிமை தன்னைப் போதிக்க
புத்தரோடு யேசு நபி போன்ற எந்தன் தூதர்களை
சித்தர்களை முத்தர்களை இருடிகளை முனிவர்களை
எத்தனையோ ஞானிகளை அங்கே அனுப்பி வைத்தேன்
அங்கே அனுப்பிவைத்த அவர் வழியே நாடாமல்
எங்கோ அலைகின்றீர் அது எந்தன் குற்றமல்ல
அஹிம்சை தனையறிய அனுப்பினேன் காந்தி தன்னை
வன்பறிந்து நீவிலக வல்லரக்கர் நான் படைத்தேன்
கள்ளமில்லா உள்ளத்தை கைக்குழந்தை காட்ட வைத்தேன்
எள்ளுக்குள் எண்ணெய் வைத்தேன் என்னை உணர்ந்துகொள்ள
நாநிலங்கள் காற்று மழை நல்லாறு கடல் மலைகள்
சோலை வனங்களுடன் தூயநீர்ப் பொய்கை வைத்தேன்.
இவைகளை நீ நஞ்சாக்கி இயல்பு நிலை மாற வைத்தாய்
எவையெல்லாம் தீமைகளோ அதன் வழியே நீ நடந்தாய்
சூரியனைச் சந்திரனைச் சுழலவிட்டேன் உனக்காக
உண்மையே வெல்லுமென்று உலகறியக் காட்டுவதற்கு
மன்னன் அரிச்சந்திரனை வாய்மைக்கு நான் படைத்தேன்
நல்லதையே பிரித்தெடுக்க நான் அன்னம் படைத்திருந்தும்
கெட்டதையே தேர்ந்தெடுத்து கெடுவதும் நீதானே
பேதை மனந்தெளிய பெரிய தர்ம சாத்திரங்கள்
கீதை குறளுனக்கு கிடைக்க வைத்தேன் மானிடனே
வருகுமே மேடு பள்ளம் வாழ்க்கையிலே என்றறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு பகல் மாற வைத்தேன் இதை நீ உணர்ந்தாயா?
பிறந்த பொழுதிலும் சா பின்னூறு ஆண்டிலும் சா
இறப்பும் பிறப்பும் என் பொறுப்பு ஆதலினால்
பிஞ்சும் உதிரும் பெருங் கனியும் தானுதிரும்
அஞ்சாமல் நீ வாழ ஆனஇடைக் காலமுண்டு
இந்த இடைக் காலத்தில் இவை உணர்ந்து வாழாமல்
என்னை மறந்து என்படைப்பின் தத்துவங்கள்
தன்னை மறந்து தலைகீழாய் நீ நடந்து
நொந்து அழுது வந்தால் இதற்கு நான் என்ன செய்வேன்
அடிப்பதுவும் நீங்கள் தான் அழுவதுவும் நீங்கள் தான்
தடுக்கி வழிநடந்து தவிப்பதனால் என்ன பயன்
உண்மையை நீ உணர்ந்து ஒழுங்காய் நடந்து வந்தால்
என்னை நீ தேடி இங்குவரத் தேவையில்லை
ஆதலினால் மானிடனே! அயர்ந்து நீ போகாதே
உன்னுடைய உள்ளத்தின் உள்ளே நீ சிந்தித்தால்
என் படைப்பின் நோக்கமெல்லாம் எளிதில் புரிந்து விடும்.
சென்று வா என் மகனே! திருந்தி நீ வாழ்ந்திடுக!
என்று சொல்லி என் தெய்வம் எனக்கு விடை தந்ததுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தத்துவம்

- நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கில்லை
- நறும்பூவின் மணம் மழுதும் சோலைக்கில்லை
- நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்துக்கில்லை
- நிறைகின்ற நீர் முழுதும் குளத்துக்கில்லை
- பல்லாரும் கனி முழுதும் மரத்துக்கில்லை
- பண்ணரம்பின் இசை முழுதும் யாழுக்கில்லை
- எல்லாமே பிறர் குழைக்கக் காணுகின்றேன்
- என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்.

**நன்றி**

இறை பணியில்
நா.முருகையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org